# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8101962

1. District மாவட்டம் : Coimbatore  PS: காவல்நிலையம் V&AC  Year: ஆண்டு 2023  FIR No.: மு.த.அ. எண் 06/2023/AC/CB  Date: நாள் 31.08.2023

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption  Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Act, 1988 as amended by the  Sections பிரிவுகள்: 7
   (iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment)  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : Act, 2018.

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 30.08.2023  Date to : நாள் வரை 31-08-2023
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 15.15 hrs  Time to : நேரம் வரை 10.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31-08-2023  Time நேரம் : 12.45 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 31-08-2023  Time நேரம் : 12.45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Tamil typed in computer

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்  at about 50 Km south, o/o the Suleeswaranpatti
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி  Town Panchayat office, Pollachi Taluk, Coimbatore.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R.V. Hari Haran  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் M. Ramachandran
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 43/2023  (d) Nationality : நாட்டினம் Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் TATA ACE Driver  (g) Address : முகவரி Door no. 3, Mariyammal St, Suleeswaranpatti, Pollachi, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   T.R. Natraj, Meter Reader, o/o the Suleeswaranpatti, Town Panchayat office, Pollachi Taluk, Coimbatore District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   - No - delay -

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Kittan 31/8/2023 (Rx2 ...) [signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 31-08-2023

Name: பெயர் P. Pasumalaiyan
Rank: நிலை Inspector No. எண் of Police
V.S.K, Coimbatore

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**

**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 6/2023/ AC/CB, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...**

31.08.2023-ம் தேதி வியாழக்கிழமை மதியம் 12.45 மணிக்கு காவல் ஆய்வாளர் P.பரிமளாதேவி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபொழுது கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, சூளேஸ்வரன்பட்டி போஸ்ட், மணியம்மை வீதி, க.எண்.3 என்ற முகவரியில் குடியிருந்து வரும் ராமச்சந்திரன் என்பவரின் மகன் R.V.ஹரிஹரன், என்பவர் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகார் மனுவை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார் சம்பந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் சூளேஸ்வரன்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் மீட்டர் ரீடராக பணி புரியும் திரு.நடராஜ் என்பவர் வாதியின் பெயரிலும் மற்றும் அவரது மனைவி பெயரிலும் வீடு கட்ட கட்டிட அனுமதி பெறுவதற்காக ரசீது வழங்கி ஒப்புதல் பெற்று வழங்குவதற்காக லஞ்சமாக பணம் ரூ.4,550/- கேட்டிருப்பது தெரியவந்தது. மேற்படி புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் எதுவுமில்லை என்றும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 31.08.2023-ம் தேதி 13.30 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.6/2023/AC/CB, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன் படி மேற்படி எதிரி திரு.நடராஜ் என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு:

அனுப்புநர் R.V. ஹரிஹரன். வயது-43, த/பெ. M. ராமச்சந்திரன், க.எண்.3, மணியம்மை வீதி, சூளேஸ்வரன்பட்டி, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர். அய்யா, நான் கோவையில் பொள்ளாச்சி வட்டம், சூளேஸ்வரன்பட்டியில் உள்ள மணியம்மை வீதியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது சொந்தமாக TATA Ace வாகனத்தை வைத்துக்கொண்டு பொள்ளாச்சி பகுதியில் வாடகைக்கு ஓட்டி வருகிறேன். எனது மனைவி பெயர் புவனேஷ்வரி ஆகும். எங்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளார்கள். மேற்கண்ட முகவரியில் உள்ள SF.No.153/2A, old S.F.No.153/2, Plot No.B88-ல் சுமார் 1200 சதுரடியில் உள்ள இடமானது எனது பெயரிலும் எனது மனைவி பெயரிலும் உள்ளது. அது ஓட்டுவீடாக உள்ளதால் அதை இடித்துவிட்டு புதியதாக 1100 சதுரடியில் தரைத்தளத்தில் வீடுகட்ட முடிவெடுத்தோம். அது சம்பந்தமாக இன்ஜினியரிடம் பிளானை பெற்று, வீடு கட்ட கட்டிட அனுமதி (Plan Approval) பெறுவதற்காக 23.08.2023-ஆம் தேதி அன்று சூளேஸ்வரன்பட்டியில் உள்ள பேரூராட்சி அலுவலகம் சென்று அங்கு கட்டிட அனுமதி பெறுவது சம்பந்தமாக வேலைகளை கவனிக்கும் மீட்டர் ரீடர், திரு.நடராஜ் அவர்களிடம் மதியம் சுமார் 1.00 மணியளவில் எனது பெயரிலும் எனது மனைவி பெயரிலும் உள்ள விண்ணப்ப மனுவுடன் பத்திர நகல், ஆதார் நகல், வில்லங்க சான்றிதழ் மற்றும் புளூ பிரின்ட் ஆகியவற்றை இணைத்து கொடுத்தேன். அப்போது அவர் என்னிடம் எனது பெயர் மற்றும் விபரத்தை கேட்டுவிட்டு இணையதளத்தில் ஆவணங்களை எடுத்து விட்டீர்களா என்றும், லேஅவுட் மேப் வைத்திருக்கிறீர்களா என்றும் கேட்டார். நான் எல்லாமே அதாவது குடிநீர் வரி ரசீது, சொத்துவரி ரசீது வைத்துள்ளேன் என்று சொன்னேன். அதற்கு அவர் 2-ரூபாய் விண்ணப்ப ஸ்டாம்ப் எங்கே என்று கேட்டார். நானும் அதை ஒட்டிவிடுகிறேன் என்று சொன்னேன். விண்ணப்பத்துடன் இணைத்துள்ள அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்துவிட்டு EC எங்கே என்று கேட்டார். அதற்கு நான் ஏற்கனவே கொடுத்துவிட்டேன் என்று சொன்னேன். அதற்கு அவர் அது வேறு பைலுங்க என்றும் இந்த பைலுக்கு வேனுமில்ல என்று சொன்னார். சரிங்க சார் நான் எடுத்து வந்திடுறேன் என்று சொல்லி வெளியே சென்று எனது வாகனத்தில் வைத்திருந்த 2-ரூபாய் ஸ்டாம்பை எடுத்து வந்து மேற்படி அலுவலகத்திலேயே வைத்து விண்ணப்பத்தில் ஒட்டி EC நகல்களுடன் திரு.நடராஜ் அவர்களிடம் கொடுத்தேன். அவரும் அதை வாங்கி கொண்டு உங்கள் மொபைல் நம்பரை

எழுதீட்டீங்களா என்று கேட்டார். நான் இல்லை அதில் எழுதல என்று சொல்ல அவரே என்னிடம் எனது போன் நம்பரை கேட்டு நான் சொல்ல சொல்ல எனது விண்ணப்பத்தில் எழுதி கொண்டார். நான் அவரிடம் சார் இதற்கு பீஸ் எவ்வளவு ஆகும் என்று கேட்டேன். அவர் நான் பார்த்திட்டு உங்களுக்கு சொல்லிருட்டுங்களா என்று சொல்லிவிட்டு எனது விண்ணப்பத்துடன் இணைத்துள்ள ஆவணங்களை சரிபார்த்துவிட்டு என்னிடம் பக்கத்தில பொள்ளாச்சியில் உள்ள ஸ்ரீசக்தீஷ்வரர் ஜெராக்ஸ் என்ற கடைக்கு சென்று இ-செலான் ரூ.300/-க்கும் யூனியன் வங்கிக்கு ரூ.11,850/-ம் கட்டிவிட்டு ஆன்லைன் ரசீது வாங்கீட்டு வந்திருங்க வேலையை முடிச்சர்லாம் என்று சொன்னார். நான் அவரிடம் அமெவுண்டு இவ்வளவுதான் ஆகுமாங்க சார் என்று கேட்டதற்கு இதெல்லாம் கட்டிட தொழிலாளர் நலவாரியம் மற்றும் டவுன்பிளான் அலுவலகத்திற்கு கட்டும் தொகை என்று சொல்லி, நீங்க கட்டிட்டு வாங்க அப்புறம் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு தனியா பணம் கட்டனும், அது எவ்வளவு ஆகும்னு சொல்றேன் என்று சொன்னார். நானும் சரி என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். பின்னர் 30.08.2023 ஆம் தேதி நான் திரு.நடராஜ் அவர்கள் சொன்ன ஸ்ரீசக்தீஷ்வரர் ஜெராக்ஸ் என்ற கடைக்கு சென்று இ-செலான் ரூ.300/-க்கும் யூனியன் வங்கிக்கு ரூ.11,850/-ம் கட்டிவிட்டு ஆன்லைன் ரசீதை பெற்றுக்கொண்டேன். பின்னர் அன்று பகல் சுமார் 3.15 மணியளவில் அவரை அலுவலகத்தில் வைத்து சந்தித்தபோது நான் இணையதளத்தில் செலுத்திய ரசீதை பார்த்துவிட்டு சரி என்று சொல்லிவிட்டு பஞ்சாயத்திற்கு செலுத்தவேண்டிய தொகையை எனது விண்ணப்பத்தில் அடங்கிய ஆவணங்களின் பின்பக்கத்தில் பென்சிலால் சில தொகைகளை எழுதி காண்பித்தார். அதை நான் பார்த்தபோது ரூ.10,450/- என்று இருந்தது. மேலும் அவர் இந்த பீஸ் தவிர ரூ.5,000/- தனக்கு தனியாக தரவேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் எனது குடும்ப சூழ்நிலையை சொல்லி பணத்தை கஷ்டப்பட்டுதான் ரெடி பண்ணமுடியும், ஏற்கனவே இணையதளம் மூலமாக அரசு பீஸ் கட்டியுள்ளேன் என்றும் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் சார் என்று கேட்டேன். அதற்கு அவர் சரி மொத்தமாக ரூ.15,000/-ஐ கொடுத்து விடுங்கள் என்று சொல்லி விட்டார். நானும் பணத்தை புரட்ட வேண்டுமென்று வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர் ரூ.10,000/-ஐ புரட்டி கொண்டு பஞ்சாயத்திற்குண்டான பீஸ் மட்டும் கட்டிவிட்டு அவரிடம் வேண்டி கேட்டுக்கொண்டு வரலாமென்று எண்ணி சூளேஸ்வரன்பட்டி பஞ்சாயத்து அலுவலகத்திற்கு 30.08.2023ஆம் தேதி பகல் சுமார் 04.00 மணிக்கு சென்று திரு.நடராஜ் அவர்களை சந்தித்தேன். என்னை

பார்த்தவுடன் ரூ.15,000/-ஐ கொண்டு வந்திட்டீங்களா என்று கேட்டார். நான் அவரிடம் சார் ரூ.10,000/-ம்தான் ரெடியாக இருக்கிறது என்றும் பஞ்சாயத்து ஆபீசுக்குண்டான பீஸ் கட்டிடரேன், ரசீது கொடுங்க சார் என்று சொன்னதற்கு என்னிடம் கோபமாக ரசீது எல்லாம் போட முடியாது நீங்க ரூ.15,000/-ஐ மொத்தமாக கொடுத்தால் தான் ரசீது போட்டு கட்டிட அனுமதிக்கு ஒப்புதல் வாங்கி தரமுடியும் என்று கட்டாயமாக சொன்னார். நான் சார் என்னால பணம் புரட்ட முடியல என்று கெஞ்சி கேட்டதற்கு சரி இந்த பணத்திற்கு நான் பஞ்சாயத்திற்கு கட்டவேண்டிய தொகைக்கு ரசீது போட்டுடறேன் மீதி தரவேண்டிய ரூ.5,000/-ஐ கொடுத்தால் தான் ரசீதும் நீங்க வீடுகட்டுவதற்காக கட்டிட அனுமதியும் பெற்றுதர ஏற்பாடு செய்வேன் என்றும் அதற்கு மேல் பணத்தை குறைக்க முடியாது என்றும் நாளைக்கு காலையில 11.30 மணிக்கு மேல் அலுவலகத்திற்கு வந்து ரூ.5,000/-த்தை கொடுத்துவிட்டு ரசீதை வாங்கிகொள்ளுங்கள் என்றும் கறாறாக சொல்லிவிட்டார். எனக்கு வேறு வழி தெரியவில்லை. நானும் சரி என்று சொல்லி வந்துவிட்டேன். இன்று காலை சுமார் 10.30 மணிக்கு திரு.நடராஜ் அவர்கள் என்னை அழைத்தார் நான் எடுக்க முடியவில்லை திரும்ப நான் அவரை அழைத்து பேசியபோது எப்போ வர்றீங்க பணம் ரெடியா என்று கேட்டார் நான் மதியம் வருகிறேன் என்று சொன்னேன். அலுவலகம் வரும்போது அவரை போனில் கூப்பிடுமாறு சொன்னார். அதன் பிறகு நான் யோசித்து பார்த்ததில் புதிய வீடு கட்டுவதற்காக பஞ்சயாத்திற்கு செலுத்தவேண்டிய கட்டணம் ரூ.10,450/-ஆகும். ஆனால் திரு.நடராஜ் அவர்கள் ரூ.15,000/-ஐ கொண்டுவரச் சொல்லி ஏற்கனவே ரூ.10,000/-ஐ பெற்று கூடுதலாக ரூ.4,550/-ஐ லஞ்சமாக கேட்கிறார். எனவே நாங்கள் புதியதாக வீடு கட்டுவதற்காக லஞ்சம் கொடுத்து கட்டிட அனுமதி வாங்க எனக்கு விருப்பமில்லை. ஆகையால் கட்டிடம் கட்ட அனுமதி பெறுவதற்காக ரசீது வழங்கி ஒப்புதல் பெற்று வழங்குவதற்காக என்னிடம் லஞ்சமாக ரூ.4,550/-ஐ கேட்கும் மேற்படி கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, சூலேஸ்வரன்பட்டியில் உள்ள பேரூராட்சி அலுவலகத்தில் மீட்டர் ரீடராக பணிபுரியும் திரு.நடராஜ் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் இப்படிக்கு ஒப்பம் (x-x-x-x-) (R.V.ஹரிஹரன்) 31.08.2023 இடம்: கோவை தேதி: 31.08.2023. Respected Madam, Received the complaint on 31.08.2023 at about 12.45hrs sd/-(xxxx) (P.Parimaladevi) 31.08.2023, Inspr. V&AC, Cbe. Respected Madam, After conducting a discreet enquiry, a case in

Coimbatore V&AC Cr.No.6/2023/AC/CB u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered by me on 31.08.2023 at 13.30hrs sd/-(xxxx) (P.Parimaladevi) 31.08.2023, Inspr. V&AC, Cbe. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

(P. பரிமளாதேவி )
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.